அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் இல. 369

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1987, மே 11

சேரல், அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்கக் கடமையில் இருக்கும்போது பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகள் காரணமாகக் காணாமற்போன உத்தியோகத்தர்களிற் தங்கியிருப்போருக்கான வேதன/நட்ட ஈட்டுக் கொடுப்பனவு.

---

பயங்கரவாதிகளின் கையில் உயிரை இழந்த அமய அல்லது தற்காலிக உத்தியோகத்தர் ஒருவர், அச்சம்பவம் நிகழ்ந்த தேதியிலிருந்து நிரந்தரமான, ஓய்வூதியம் பெறத்தக்க உத்தியோகத்தராகக் கருதப்பட்டு அவரது சேவைக்கால நீட்டம் எதுவாயிருப்பினும் மரணப் பணிக்கொடைக்குத் தகுதியுடையவராகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

02. மரணமெய்திய விவாகமாகாத நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரில் தங்கியிருப்போர்களுக்கு, மரணமெய்தியவர் 55 வயதினை எய்தும் காலம் வரையில் அவரால் பெறத்தக்க வேதனமும் பிறபடிகளும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(தங்கியிருப்போர் என்பது, வருமானம் கருத்துக்கு எடுக்கப்படாது, பெற்றோர் எனப் பொருள்படும். உத்தியோகத்தர் 55 வயதினை எய்தும் காலத்துக்கு முன்னர் பெற்றோர்கள் மரணமெய்தினல் 18வயதுக்கு உட்பட்ட உத்தியோகம் இல்லாத அவரது சகோதரர்களும் விவாகமாகாத சகோதரிகளும் எனப் பொருள்படும்.)

03. மரணமெய்திய விவாகமாகாத உத்தியோகத்தரது பெற்றோருக்கு, அவர்களது வருமானம் எத்தகையதாக இருப்பினும், 296ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நட்ட ஈடு கொடுக்கப்படுதல் வேண்டும்.

04. இப்பொறுப்பினை ஒரு முன்னுரிமை விடயமாகக் கருதி அதனை நிறைவேற்றுவதற்கு அமைச்சு அல்லது திணைக்களம் ஒவ்வொன்றும் 1987இன் வாக்குப் பண ஏற்பாட்டில் சேமிப்புகளை ஏற்படுத்துதல் வேண்டும். மேலதிக நிதியம் எதுவும் திறைசேரியிடமிருந்து கோரப்படலாகாது.

05. இந்தத் திட்டம் 1987-01-01இல் இருந்து செயல்வலுப் பெறுகிறது.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.